Australian Government

Department of Immigration and Border Protection

# ஆட்கடத்தலை முறியடிப்பதற்குப் படிப்பறிவு முக்கியமானது

அவுஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத படகு முயற்சியைத் தடுப்பதில் அவுஸ்திரேலியாவின் வலுவான எல்லைப்பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் திறமைகள் மிகவும் ஆற்றல்வாய்ந்தவையென நிரூபித்துள்ளன.

அவுஸ்திரேலிய எல்லைகளின் இறையாண்மைக்கான நடவடிக்கை (Operation Sovereign Borders (OSB ) படைத்தலைவர், உப வான்படைத்தளபதி (Air Vice Marshal) Stephen Osborne கூறுவதன் பிரகாரம், அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகக் குடியேறும் முயற்சியிலிருந்து மக்களைத் தடுப்பதற்குக் கல்வியறிவு முக்கிய பங்கு வகிக்கிறது.

“சட்டவிரோதமாகப் படகுவழியாக அவுஸ்திரேலியாவைச் சென்றடைய முயற்சிப்பதன் பாரதூரமான ஆபத்துக்களையும், விளைவுகளையும் பற்றி வேறு நாடுகளிலுள்ள வலுவற்ற மக்களுக்குப் போதிக்கவேண்டியது Operation Sovereign Borders இன் இலக்குகளில் ஒன்றாகும்.

“அவுஸ்திரேலியாவினது எல்லைப் பாதுகாப்புக் கொள்கைகள் குறித்த உண்மைகளை மக்கள் அறியாவிடின், அவர்கள் ஒரு தப்பான முடிவையெடுக்கவும், அவுஸ்திரேலியாவுக்கு ஒரு ஆபத்தான படகுக் கடற்பயணத்தை மேற்கொள்ளவும் முயற்சிப்பதற்கான அபாயம் உண்டு.

உயிர்களைப் பாதுகாப்பதிலும், அவுஸ்திரேலியாவின் எல்லைகளைப் பாதுகாப்பதிலும் அவுஸ்திரேலிய சமூகம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கமுடியுமென வான்படைத் துணைத் தளபதி ( Air Vice-Marshall )Osborne விபரித்தார்.

“வெளிநாட்டு மக்களின் குடியேற்ற முடிவுகளில் செல்வாக்குச் செலுத்துவதில் குறிப்பிடக்கூடிய ஒரு பங்கினை அவுஸ்திரேலிய பல்கலாச்சார சமூகங்கள் வகிப்பதாக எமது ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகிறது.

“இதன் காரணமாக, அவுஸ்திரேலியாவினது எல்லைப்பாதுகாப்புக் கொள்கைகள் பற்றிய விளிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் மற்றும் தமது நாட்டிலுள்ள நண்பர்கள், உறவினர்களுடன் இந்தச் செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்காகச் சமூக உறுப்பினர்களை உற்சாகமூட்டுவதற்கும் இத்தகைய சமூகங்களுடன் பணியாற்றுவதற்கு நாம் பற்றுறுதி கொண்டுள்ளோம்.

“ஒரு நம்பிக்கைக்குரிய நண்பர் அல்லது உறவினரிடமிருந்து தகவல் வரும்போது அதனை மக்கள் அநேகமாக நம்புவார்கள் ஆதலால், வெளிநாட்டு மக்களின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்துவதற்கான ஒரு கட்டம் வரும்போது இத்தகையோர் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும்,” என்றார் அவர்.

அவுஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத புலப்பெயர்ச்சியைத் தடுப்பது பற்றி OSB வினது உறுதியான பதிவு இருந்தபோதும், நாம் திருப்திகொள்ள முடியாதென வான்படை உப தளபதி (Air Vice-Marshal) Osborne எச்சரித்தார்.

" எமது எல்லைப் பாதுகாப்புக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றம் குறித்து அல்லது அவுஸ்திரேலியாவுக்கான புதிய பாதை பற்றிய வதந்திகளையும், பொய்யான தகவல்களையும் ஆட்கடத்துவோர் தீவிரமாகப் பரப்பி வருகிறார்கள்.

"ஆதலால், அவர்களை நாடி, உண்மைகளை உரைத்து ஆட்கடத்துவோரின் பொய்களுக்கெதிராக நடவடிக்கையெடுப்பதற்கான எல்லா வாய்ப்புக்களையும் நாம் உபயோகிப்பது முக்கியமானதாகும்.

"எல்லைப் பாதுகாப்புக்கொள்கைகள் மாறமாட்டாது என்பதில் அவுஸ்திரேலிய அரசாங்கம் மிகவும் தெளிவாக உள்ளது.

"படகுவழியாகச் சட்டவிரோதமாக எவரொருவர் அவுஸ்திரேலியாவைச் சென்றடைய முயற்சிக்கிறாரோ அவர் நிறுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்படுவார்," என்றுஅவர் கூறினார்.

அவுஸ்திரேலியாவினது கடுமையான எல்லைப்பாதுகாப்புக் கொள்கைகள் பற்றி வெளிநாடுகளிலுள்ள உறவினர் மற்றும் நண்பர்களுடன் பேசுவதற்கு அவுஸ்திரேலியாவின் பல்கலாச்சார சமூகங்களின் ஒத்தாசையை வான்படை உப தளபதி (Air Vice-Marshal ) Osborne கேட்டுக்கொண்டார்.

"வலுவிழந்த மக்கள் ஆட்கடத்துவோரால் ஏமாற்றப்படுவதிலிருந்தும், தமது உயிர்களை ஆபத்திலிருந்து பாதுகாக்கவும் அவுஸ்திரேலியாவின் பல்கலாச்சார மக்கள் எமக்கு உதவவேண்டியது அவசியமாகும்.

"ஒரு செல்லுபடியான வீசாவுடன் வருவதுதான் அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கான ஒரே வழியாகுமென்பதனை உங்கள் நண்பர்கள், உறவினர்களுடன் பேசும்போது தயவுசெய்து அவர்களுக்குச் சொல்லவும். ஆட்கடத்துவோரை நம்பிப் படகில் ஏறுவதன்மூலம் தமது பணத்தை வீணாக்கவோ அல்லது உயிரைப் பணயம் வைக்கவோ வேண்டாமென அவர்களுக்குச் சொல்லவும்.

"அவுஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத கடல்வழிப்பாதை மூடப்பட்டுள்ளது; அது தொடர்ந்தும் மூடப்பட்டே இருக்கும்," என்றுஅவர் சொன்னார்.

OSB குறித்த மேலதிக தகவல்களுக்காகத் தயவுசெய்து வருகை தாருங்கள்: www.australia.gov.au/novisa